**இ.வே.ஆரா.கு – மத்திய பருத்தி ஆராய்ச்சி நிறுவனம்**
**நாக்பூர்**

25 வது வாரம் - வாராந்திர ஆலோசனைகள்- பருத்தி பயிர் சாகுபடி (7-13 நவம்பர் 2023 )

(46வது நிலையான வாரம்)

“இங்குதரப்பட்டுள்ள அறிவுரைகள்- அந்தந்த மாநில அரசு வேளாண்மை பல்கலைக்கழகங்களிலிருந்து பெறப்பட்டவை”

| **தமிழ்நாடு** | | பெய்த மழையளவு –(மி.மீ) | | | | | கணிக்கப்பட்டுள்ள மழையளவு – (மி.மீ) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | நவம்பர் | | | | | நவம்பர் | | | | |
| | | **03** | **04** | **05** | **06** | **07** | **09** | **10** | **11** | **12** | **13** |
|  | பெரம்பலூர் | 0 | 0 | 0 | 8.2 | 0 | 15 | 25 | 6 | 10 | 25 |
| | சேலம் | 0 | 0 | 0 | 0 | 0 | 40 | 11 | 12 | 18 | 25 |
| | திருச்சி | - | - | - | - | - | 15 | 20 | 6 | 12 | 15 |
| | விருதுநகர் | 0 | 0 | 0 | 0 | 23 | 45 | 30 | 20 | 45 | 40 |
| மழையின் அளவு மற்றும் வண்ணக் குறியீடு | | 0.1 to 2.4 மி.மீ | | 2.5 to 15.5 மி.மீ | | 15.6 to 64.4 மி.மீ | | 64.5 to 115.5 மி.மீ | | 115.6 to 204.4 மி.மீ | |
| மழைப்பொழிவு வகை | | மிக லேசான மழை | | லேசான மழை | | மிதமான மழை | | பலத்த மழை | | மிக அதிக மழைப்பொழிவு | |

**பயிர் நிலை:**

கோயம்புத்தூர் மற்றும் அருகில் உள்ள பகுதிகளில் பருத்தி பயிரானது காய் வளர்ச்சி பருவத்தில் உள்ளது. சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதல் வயல்களில் காணப்படுகிறது. அல்ட்ர்னேரியா தேமல் நோய், பாக்டீரியல் இலைப்புள்ளி நோய், வேர் அழுகல் நோய் மற்றும் பூகையிலை மொசைக் வைரஸ் தாக்குதல் காணப்படுகிறது.

ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் அருகில் உள்ள பகுதிகளில் பயிரிடப்பட்ட பருத்தி பயிரானது பூக்கும் தருவாய் முதல் காய் பிடிக்கும் பருவத்தில் உள்ளது. வயல்களில் களைகள் காணப்படுகிறது. தத்துப்பூச்சி மற்றும் தண்டு கூன் வண்டு பொருளாதார சேதநிலையை விட குறைவாக உள்ளது. வேர் அழுகல் நோய் தாக்குதல் சில பகுதிகளில் காணப்படுகிறது

**ஆலோசனைகள்:**

கோயம்புத்தூரில் விவசாயிகள், சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதலை கட்டுப்படுத்த பிலோனிகமிட் 50 டபில்யுஜி @80 கி/ஏக்கர் (அல்லது) டையாபென்தியூரன் 50 டபில்யுபி@ 250கி/ஏக்கர் (அல்லது) இமிடாக்ளோபிரிட் 17.8 யெஸ் எல் @60 மிலி/ ஏக்கர் (அல்லது) தாயோமித்தாகசம் 25% டபில்யுஜி @40கி/ஏக்கர் தெளிக்கவும். மேலும் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதல் பொருளாதார சேதார நிலைக்கு எதிராக பயன் படுத்தவும். பருத்தியில் பூகயீலை மொசைக் வைரஸ் (TSV) தொற்று பரவுவதை தடுக்க பார்த்தீனியம்களைகளை வயலில் இருந்து அகற்றவும் மற்றும் இலைப்பேன்களை கட்டுப்படுத்த தாயோமித்தாகசம் 25% டபில்யுஜி @2கி/10 லி (அல்லது) ஸ்பினேடோரம் 11.7 யெஸ் சி @170 மி லி/ஏக்கர் பயன்படுத்தவும். இளஞ்சிவப்பு காய் புழுக்களின் தாக்குதல் பொருளாதார சேதார நிலக்கு மெல் காணப்பட்டால் பிரோஃபேனோபோஸ் 50 ஈ சி @600 மிலி/ஏக்கர் (அல்லது) குளோர்பைரிபோஸ் 20 ஈ சி @ 500 மி லி (அல்லது) குய்னல்போஸ் 20 ஏஃப் @ 400 எம்எல்/ ஏக்கர் (அல்லது) ஏமாமேக்ட்டின் பெஞ்சோட் 5 யெஸ் ஜி @100 கி/ஏக்கர் (அல்லது) இந்தோக்ஷகர்ப் 14.5% SC @ 200 மி லி/ ஏக்கர் பயன்படுத்தவும்.

அல்டர்னெரியா இலை தேமல் நோயை கட்டுப்படுத்த கார்பன்டர்சிம் 50 டபிள்யு பி@ 0.04 % (அல்லது) கார்பன்டர்சிம் 12% மற்றும் மேங்கோசப் 63%@0.3 % (அல்லது) கிரிலோசிம் மெத்தில் 44.3 எஸ் சி@0.1 (அல்லது) ரோப்பி நிப் 70 டபிள்யூ பி@ 0.25 % (அல்லது) துரோபி கோனோசோல் 25 ஈசி@0.1% மெட்டிராம் 55% மற்றும் பைரா குளோரோபில் 5 % டபிள்யூ ஜி @0.2 (அல்லது) அசோசா சிஸ்ரோபின் 18.2% டபிள்யூ /டபிள்யூ எஸ் சி ஃ@0.1 மற்றும் டைபெனோகோனஜோல் 11.4% யெஸ் சி (அல்லது) ஃப்ளோஷோ பைரோசாட் 167 கி/லிட்டர் மற்றும் பைரா குளோரோபின் 333 கிராம் /லிட்டர் எஸ்சி @0.6% கலந்து தெளிக்கவும். பாக்டீரியா மூலம் பரவும் இலைதேமல் நோய்யை கட்டுப்படுத்த காப்பர் ஆக்ஸி குளோரைட் 50 டபிள்யூ பி /டபிள்யூ ஜி தெளிக்கவும். வேர அழுகல் வரும் முன் காப்பதற்காக, வேர்களின் அடிப்பகுதியில் கார்பன்டசிம் 50 டபிள்யு பி @1 கிராம்/லிட்டர் நீரில் கலந்து ஹெக்டருக்கு தெளித்து வேர் அழுகல் நோய் தாக்குதலை கட்டுப்படுத்தலாம்.

ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் அருகிலுள்ள பகுதிகளில், களை கட்டுப்பாடிற்க்காக கிளுபோசிநேட் அம்மோனியம் 13.5 யெஸ் எல் @ 500 மி லி/ 100 லிட்டர் என்ற வீதத்தில் கலந்து பருத்தியின் இடைவெளியில் பாதுகாப்பு பெட்டியை பயன்படுத்தி தெளிக்கவும். மாறாக, ஈரப்பதமான மண்ணில் களைக்கொல்லியான பைரிதியோ பேக் சோடியம் 6 % ஈசி மற்றும் குசோலோபாப் எத்தில் 4 % ஈசி@ 500 மில்லி லிட்டர்/ஏக்கர் 150 லிட்டர் தண்ணீரில் கறைத்து தெளித்து ஒராண்டு புல் மற்றும் அகன்ற இலைகளை உடைய களைகளை கட்டுப்படுத்தலாம். தத்துப்பூச்சிகளின் தாக்குதல் பொருளாதார சேதார நிலைக்கு மேலே காணப்பட்டால் டிநோடிபூரான் 20 யெஸ் ஜி @ 60 கி/ஏக்கர் (அல்லது) தாயோமித்தாகசம் 25% டபில்யுஜி @40கி/ஏக்கர் தெளிக்கவும். மேலும், சப்பை மற்றும் பூக்களின் மேல் இளஞ்சிவப்பு காய் புழுக்களின் தாக்குதல்களை கண்காணிக்கவும். பொருளாதார சேதார நிலைக்கு மேலே காணப்பட்டால், கட்டுப்படுத்த ஏமாமேக்ட்டின் பெஞ்சோட் 5 யெஸ் ஜி @100 கி/ஏக்கர் (அல்லது) இந்தோக்ஷகர்ப் 14.5% SC @ 200 மி லி/ ஏக்கர் பயன்படுத்தவும். வேர அழுகல் அறிகுறி காணப்பட்ட வேர்களின் அடிப்பகுதியில் கார்பன்டசிம் 50 டபிள்யு பி @1.2 கிராம்/லிட்டர் (அல்லது) டிரைக்கோடர்மா ஹர்ஜியனம் (அல்லது) டிரைக்கோடர்மா விரிடே நீ டபிள்யூ பி @ 5-6 கி/லிட்டர் நீரில் கலந்து தெளித்து வேர் அழுகல் நோய் தாக்குதலை கட்டுப்படுத்தலாம்.

**தமிழ் மொழிபெயர்ப்பு: முனைவர். அ. மணிகண்டன், முனைவர். ம. சரவணன்**